**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**DV.No.14/2019**

Deposition of **PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | தீப்தி | **Age** | : | 32/2026 |
| **Father's Name** | : | முருகன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | தனியார் ஊழியர் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12/03/2026.**

1, 4 எதிர்மனுதாரர்கள் ஆஜர். 2. 3. 5, 6 எதிர்மனுதாரர்கள் ஆஜரில்லை. மனுதாரர் வழக்கறிஞர் ஆஜர். எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3) எனக்கு சொந்த ஊர் போடிநாயக்கனூர். நான் பி.இ. கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துள்ளேன். திருமணத்தின் போது நான் போடியில் வேலை செய்து கொண்டு இருந்தேனா? என்றால், இல்லை. தற்போது நான் பெங்களூரில் உள்ள ஐ.டி. கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் என்றால், சரிதான். என் கணவருக்கு சொந்த ஊர் சின்னாளப்பட்டி. என் பெரியம்மா மலர்விழி சின்னாளப்பட்டியில் தான் உள்ளார் என்றால், சரிதான் என் மாமா ஆனந்தும் அங்கு தான் உள்ளார் என்றால், சரிதான். என் மாமா ஆனந்த் என்பவர் மூலமாக தான் சின்னாளப்பட்டியில் வரன் பார்த்தார்கள் என்றால், புரோக்கர் மூலமாக வரன் பார்த்தார்கள். என் மாமா முன்னிலையில் திருமணம் நடந்தது. 17/2/2017 ஆம் தேதி சின்னாளபட்டியில் திருமணம் நடந்தது என்றால், சரிதான்.

4) திருமணம் முடித்து முதல் 2 நாட்கள் சின்னாளபட்டியில் இருந்தோம் என்றால், சரிதான். அதன் பிறகு 3 நாட்கள் போடிக்கு மறுவீடு வந்து சென்றோம்

என்றால், சரிதான். மீண்டும் சின்னாளப்பட்டி சென்று 2 நாட்கள் இருந்தோம் என்றால், 3 நாட்கள் இருந்தோம். அதன்பிறகு தேனிலவிற்காக கர்நாடகாவிற்கு 3 ½ நாட்கள் சென்று வந்தோம். அதன்பிறகு 2/3/2017 ஆம் தேதி சென்னையில் மடிப்பாக்கத்தில் தனிக்குடித்தனம் சென்றுவிட்டோம் என்றால், சரிதான். அங்கு சென்ற ஒரு வாரத்தில் 1ம் எதிர்மனுதாரரின் சம்பளத்தை நான் எனக்கு தர வேண்டும் என கேட்டேன் என்று சொன்னால், சரியல்ல. மேலும் எதிர்மனுதாரரின் அம்மா மற்றும் அவரது குடும்பத்தாருடன் என் கணவர் பேசக்கூடாது என நிபந்தனை விதித்தேன் என்றால், சரியல்ல.

5) நான் 2017 ஆம் வருடம் மே மாதம் கருவுற்றேன் என்றால், சரிதான். நான் கருவுற்றவுடன் வேலையை ராஜினாமா செய்து விட்டேன் என்றால். சரிதான். அந்த சமயத்தில் எனது அம்மா 15 நாட்கள் வந்து என்னை கவனித்துக் கொண்டார் என்றால், நான் வேலைக்கு சென்ற சமயத்தில் தான் எனது அம்மா வந்து என்னை கவனித்துக் கொண்டார். வேலையை விட்ட பிறகு எனது மாமியார் தான் உடன் இருந்தார். என் மாமியார் 4 நாட்கள் இருந்தார். என் மாமியார் உடன் இருந்தபோது அவரை மரியாதை குறைவாக பேசி ஒருமையில் பேசி அவரை ஊருக்கு அனுப்பி வைத்தேன் என்றால். சரியல்ல. 15/6/2017 ஆம் தேதி சின்னாளபட்டியில் வைத்து எனது மாமா ஆனந்த வீட்டில் மாமியாரை மரியாதை குறைவாக நடத்தியது சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்தது என்றால், என்னை கருக்கலைப்பு செய்ய சொல்லி என் மாமியார் சொன்னார். நான் ஒத்துக் கொள்ள மறுத்ததால் பிரச்சனை ஏற்பட்டது.

6) அந்த பஞ்சாயத்திற்கு பிறகு 3 நாட்கள் நான் எனது பெரியம்மா வீட்டில் தங்கி இருந்தேன் என்றால், சரிதான். எனது பெரியம்மா வீட்டிற்கு போவதற்கு முன்பாக 1 மாதம் வரை எனது மாமியார் வீட்டில் தான் நான் இருந்தேன். பஞ்சாயத்து நடந்த பிறகு 3 நாட்கள் நான் போடியில் தங்கி இருந்தேன் என்றால், சரியல்ல. நான் சென்னைக்கு சென்ற பிறகு எனது கணவர் தான் சமையல்

செய்து கொண்டார் என்றால், சரியல்ல. நான் சென்னைக்கு சென்ற பிறகு நான் பெரும்பாலும் கடையில்தான் வாங்கி சாப்பிட்டேன் என்றால், சரியல்ல. செப்டம்பர் 20ஆம் தேதி எனது கணவருக்கு பிறந்தநாள் வந்து நாங்கள் கொண்டாடினோம் என்றால், சரிதான். அன்றைய தினம் என் கணவரின் அம்மா எனக்கு தொலைபேசியில் பேசிய போது நான் அவரை அசிங்கமாக பேசினேன் என்றால், சரியல்ல.

7) 11/10/2017 ஆம் தேதி நானும் என் கணவரும் போடிக்கு வந்து தலை தீபாவளி கொண்டாடினோம் என்றால், சரிதான். 7/12/2017 ஆம் தேதி எனக்கு சின்னாளப்பட்டியில் வைத்து வளைகாப்பு நடைபெற்றது என்றால், சரிதான். வளைகாப்பிற்கு அன்றைய தினம் காலையில் தான் வந்தேன் என்றால். சரியல்ல. முதல் நாள் வந்தேன் வளைகாப்பின் போது எனது நகைகளை தான் எனக்கு கொடுத்து என்னை அலங்காரம் செய்தார்கள் என்றால், சரியல்ல. எனது நகைகளை எடுத்து வைத்துக்கொண்டு அலங்கார நகைச்செட்டுகளை தான் என்னிடம் கொடுத்தார்கள். என்னுடைய நகைகளை போட்டு தான் வளைகாப்பு நடத்தினார்கள் என்றும், அன்றைய தினம் மதியமே நான் என்னுடைய நகைகளுடன் போடிக்கு சென்று விட்டேன் என்றால், சரியல்ல.

8) நான் போடியில் இருந்த போது எனது கணவர் பொங்கலுக்கு என்னுடன் வந்து விசேஷத்தில் கலந்து கொண்டார் என்றால், சரிதான். அப்போது நான் எனது கணவரிடம் சின்னாளப்பட்டிக்கு செல்லக்கூடாது என்றும் நேரடியாக சென்னைக்கு செல்ல வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தேன் என்றால், சரியல்ல. 14/2/2018 ஆம் தேதி எனக்கு போடியில் பெண் குழந்தை பிறந்தது என்றால், சரிதான். அதற்கு என் கணவர் என்னிடம் சின்னாளப்பட்டிக்கு தகவல் சொல்லுங்கள் என்று சொன்னதற்கு நாங்கள் சின்னாளப்பட்டிக்கு தகவல் சொல்ல மாட்டோம் என சொல்லிவிட்டதாக சொன்னால், சரியல்ல. குழந்தை பிறந்த அன்றே எனது கணவர் என்னை வந்து பார்த்தார் என்றால், சரிதான்.

17ஆம் தேதி வரை என்னுடன் தான் இருந்து மருத்துவமனையில் என்னை பார்த்துக் கொண்டார் என்றால், சரிதான்.

9) 17ஆம் தேதி எனது திருமண நாள் என்றால், சரிதான். அதனால் நாங்கள் மருத்துவமனையில் வைத்து கேக்கு வெட்டி திருமண நாளை கொண்டாடினோம் என்றால், சரிதான். அப்போது எனது அம்மா எதிர்மனுதாரையும் அவரது அம்மாவையும் தவறாக சேர்த்து பேசினார் என்றால், சரியல்ல. எனது பெற்றோர்தான் அந்த விழாவை ஏற்பாடு செய்தார்கள். எனது கணவருக்கு அதில் விருப்பமில்லை. அதனால் 17ஆம் தேதி எதிர்மனுதாரர் சின்னாளபட்டிக்கு சென்றுவிட்டார் என்றால், அவரது அம்மா அவரை அழைத்துச் சென்று விட்டார். 17ஆம் தேதி இரவு வீட்டிற்கு சென்ற எதிர்மனுதாரரை எனது பெரியம்மா நேரில் சென்று அவதூறாக பேசினார் என்றால், சரியல்ல. 17ஆம் தேதி எனது கணவர் வீட்டிற்கு சென்றவுடன் எங்களது போன் நம்பரை எல்லாம் பிளாக் செய்து விட்டார். அதனால் நான் எனது பெரியம்மா மூலம் தகவல் சொன்னேன். அதற்கு எனது பெரியம்மா என் கணவரின் வீட்டிற்கு சென்று நான் அழுது கொண்டிருப்பதாகவும், சமாதானம் செய்து வையுங்கள் என்று சொல்வதற்காக சென்றார். அவரை அவர்கள் அவதூறாக பேசி விட்டார்கள்.

10) அதனால் எனது கணவர் வீட்டார் மறுநாள் சின்னாளப்பட்டி காவல் நிலையம் சென்று எனது பெரியம்மா மீது புகார் கொடுத்து அதற்கு மனு ரசீது பதிவு செய்யப்பட்டது என்றால், மருத்துவமனையில் இருந்த என் மீதும் சேர்த்து தான் புகார் கொடுத்தார்கள். அன்றைய தினம் காவல் நிலையத்தில் இரு தரப்பினரையும் அழைத்து எனது பெரியம்மா எங்கள் குடும்ப பிரச்சினைகள் தலையிட வேண்டாம் என எழுதி கொடுத்துவிட்டு சென்றார் என்றால், சரிதான். அதைத் தொடர்ந்து நான் சென்னைக்கு சென்று பள்ளிக்கரணையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் கணவர் மீது புகார் கொடுத்தேன்

என்றால், சரிதான். அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் எனது கணவரை அவர் பணி செய்யும் இடத்திலிருந்து அழைத்து விசாரித்தார்கள் என்றும், விசாரணையின் முடிவில் நான் கொடுத்த புகார் பொய் புகார் என தெரிய வந்தது என்று சொன்னால், சரியல்ல.

11) நான் இணையதளம் வாயிலாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியருக்கு புகார் அளித்து அதன் அடிப்படையில் மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்தில் இருந்து எங்கள் இருவரையும் அழைத்து விசாரித்தார்கள் என்றால், சரிதான். அதன் பிறகு 2019 ஆம் வருடம் போடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் மீது புகார் கொடுத்தேன் என்றால், சென்னையில் கொடுத்த புகாரில் அவர்கள் தான் போடியில் சென்று புகார் கொடுக்கும்படி சொன்னார்கள். அதனால் கொடுத்தேன். அந்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். காவல் நிலையத்திலிருந்து தேனி மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு வரதட்சணை கொடுமை நடந்ததா என்பது குறித்து விசாரணை செய்யப்பட்டது என்றால், சரிதான்.

12) வரதட்சணை கொடுமை நடைபெறவில்லை என அறிக்கை தரப்பட்டதால் போடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரை மிஸ்டேக் ஆப் பேக்ட் என முடித்து வைத்து விட்டார்கள் என்றால், நான் அதில் கையொப்பம் செய்யவில்லை. அந்த கையொப்பம் போலியாக போடப்பட்டுள்ளது. அது குறித்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த மிஸ்டேக் ஆப் பேக்ட் என்று முடிக்கப்பட்ட வழக்கின் மீது சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நான் மனு தாக்கல் செய்து நான் கொடுத்த புகாரின் மீது மீண்டும் விசாரணை செய்ய உத்தரவு பெற்றேன் என்றால், சரிதான். மீண்டும் விசாரணை செய்து போடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தார் மீண்டும் எல்லா சாட்சிகளையும் விசாரித்து மிஸ்டேக் ஆப் பேக்ட் என தான் அறிக்கை தாக்கல்

செய்தார்கள். எனக்கு அது சம்பந்தமாக எந்த ஒரு தகவலும் வரவில்லை. என்னை விசாரிக்கவும் இல்லை.

13) அந்த சமயத்தில் தான் நான் இந்த மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால், நான் அதற்கு முன்னமே தாக்கல் செய்து விட்டேன். அந்த சமயத்தில் நான் ஜீவனாம்சம் கோரி இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அந்த மனு தேனி குடும்ப நல நீதிமன்றத்திற்கு மாற்றலாகி தீர்ப்பாகியது என்றால், சரிதான். 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ரூ.18,60,000/– எனக்கு ஜீவனாம்சமாக கொடுத்துள்ளார் என்றால், எனக்கு கணக்கு தெரியவில்லை. ஆனால் இன்னும் ஜீவனாம்சத் தொகை கொடுக்கப்பட வேண்டி உள்ளது. அந்த ஜீவனாம்ச உத்தரவின் மீது எதிர்மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். உயர்நீதிமன்றத்தில் சமரச மையத்திற்கு அனுப்பி அங்கு என்னிடம் சமரசம் பேசினார்கள் என்றால், சரிதான்.

14) என் கணவர் என்னை சின்னாளப்பட்டிக்கு அழைத்துச் சென்று வாழ்வதாக சொன்னார் என்றும், நான் தான் சின்னாளபட்டிக்கு செல்ல மாட்டேன் என்று சொல்லிவிட்டேன் என்றால், என்னை சின்னாளபட்டியில் வைத்து தான் கொடுமை செய்தார். அதனால் சின்னாளப்பட்டிக்கு சென்று வாழ முடியாது என சொன்னேன். 09/092021 ஆம் தேதி முதல் 27/9/2024 வரை தேனியில் உள்ள ஆக்சிஸ் வங்கியில் பணிபுரிந்தேன் என்றால், சரிதான். ஜீவனாம்சம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் பார்த்து வந்த அந்த வேலையை விட்டு விட்டேன் என்றால், சரியல்ல. எனது குழந்தையை கவனிக்க முடியவில்லை. அதனால் அந்த வேலையை விட்டு விட்டேன். நான் தற்போது பெங்களூருவில் உள்ள மைன்ட் டீரீம்ஸ் என்ற நிறுவனத்தில் நான் வேலை செய்து வருகிறேன் என்றால், சரிதான் நான். அந்த நிறுவனத்தில் சுமார்

ரூ.45,000/– சம்பளம் வாங்கி வருகிறேன் என்றால், ரூ.44,000/– சம்பளம் வாங்கி வருகிறேன்.

15) நான் வேலை பார்த்த விபரத்தை இந்த நீதிமன்றத்தில் மறைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது கணவர் திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் 11/7/2019 என விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால், சரிதான். அது தள்ளுபடி ஆகிவிட்டது. அது தேனி குடும்ப நல நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 552/2022 என எண்ணிடப்பட்டு வழக்கு நடந்தது என்றால், சரிதான். அந்த வழக்கில் எனது கணவர் ஆஜரின்மையால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால், சரிதான். அந்த வழக்கை மீண்டும் எடுத்து நடத்த கூறி எனது கணவர் மனு செய்து அதன் நிலுவையில் உள்ளது என்றால், அந்த விபரம் எனக்கு தெரியாது. தேனி குடும்ப நல நீதிமன்றத்தில் 178/2022 என சேர்ந்து வாழ கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அந்த வழக்கு உத்தரவாகியது. அந்த வழக்கில் எனது கணவருக்கு எந்தவித அழைப்பு ஆணையும் சார்பு செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. அந்த வழக்கிலும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஒருதலைபட்ச உத்தரவு என்றால், சரிதான்.

16) எதிர்மனுதாரர் வன்கொடுமை செய்ததற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்து உள்ளேனா? என்றால், என் வீட்டில் நடந்ததை என் அம்மாவிடம் தான் சொல்லுவேன். எனக்கு ஏற்கனவே ஜீவனாம்ச உத்தரவு உள்ளது என்றும், அந்த உத்தரவிற்கு எதிராக எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்து அதன் நிலைமையில் உள்ளது என்றும், அதனால் இந்த வழக்கில் எனக்கு ஜீவனாம்சம் தர உத்தரவிட வேண்டியது இல்லை என்று சொன்னால், சரியல்ல. நான் வேலை பார்த்து சம்பளம் வாங்கி வருவதால் நான் ஜீவனாம்சம் கோர தகுதியற்றவர் என்றால், சரியல்ல. எதிர் மனுதாரர் மாதம் 12 லட்சம் சம்பாதித்து வருகிறார்.

எனக்கு குழந்தை உள்ளது. நான் திருமணம் ஆகி 1 வருடம் தான் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால், சரிதான். என் கணவர் தற்போது எங்கும் வேலை பார்க்கவில்லை என்றும், எந்த சம்பளமும் வாங்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.

17) நாங்கள் சேர்ந்து வாழ்ந்த அந்த 10 மாத காலத்தில் 4 நாட்கள் தான் சின்னாளபட்டியில் இருந்தோம் என்றால், சரியல்ல. சுமார் 2 மாதம் வரை அங்கு இருந்தோம். நகைகளை நான் வளைகாப்பின் போது எடுத்து வந்து விட்டேன் என்றும், நகைகள் எதுவும் எதிர்மனுதாரர் தர வேண்டியது இல்லை என்று சொன்னால், சரியல்ல. எனது கல்வி சான்றிதழ்களை போடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து எதிர்மனுதாரர் என்னிடம் கொடுத்து விட்டார் என்றால், சரிதான். தேனி சமூக நலத்துறை அலுவலகம், திண்டுக்கல் சமூக நலத்துறை அலுவலகம், சென்னை காவல் நிலையம், போடி காவல் நிலையம் ஆகியவற்றில் விசாரிக்கப்பட்டு நான் கொடுத்த புகார் பொய்யென நிரூபிக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. என்னை அவர்கள் விசாரிக்கவில்லை. நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and admitted
by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.12 19:30:02 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**